# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1915 - 2015 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2015.05.15

*1915 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 796 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 796 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 798 |


**கவனிக்க** .- நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் சேர் பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் ஆகியன 2015, மாச்சு 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாக வெளியிடப்படுகின்றன.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, மே மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

**பியகம பிரதேச சபை**

பியகம பிரதேச சபையின் முகாமைத்துவ உதவி தொழில்நுட்பம் அல்லாத 2 ஆம் பிரிவின்கீழான வருமான வரிப் பரிசோதகர் பதவிக்கான திறந்த ஆட்சேர்ப்பு தொடர்பான 2015.04.24 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் கல்வித் தகைமைகளில் திருத்தம் செய்தல்.

| | பதவிப்பெயர் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | வருமானப் பரிசோதகர் | 04 |

**கல்வித் தகைமைகள்** (Educational qualifications).-

(1) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் ஆகியவற்றுடன் இன்னும் இரண்டு பாடங்களுக்கு திறமைச்சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க. பொ. த. (உ/தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு (1) பாடத்திலேனும் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் சேர்க்கப்பட்ட வருமானப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதி 2015.05.28 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

5-372

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பெந்தோட்டை பிரதேச சபை**

அனுமதிக்கப்பட்ட இடையாப்பு

1952 ஆம் ஆண்டின் (261 ஆம் அத்தியாயம்) 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (அனுமதிக்கப்பட்ட இடையாப்பு) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி பெந்தோட்டை பிரதேச சபையினால் 2014.12.15 ஆந் திகதி கூட்டப்பட்ட சபை அமர்வில் உப பிரிவில் உள்ள இலக்க 02-01 கொண்ட முன் மொழிவு நிறைவேற்றப்பட்டதாக இத்தால் பொதுமக்கள் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகிறது.

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபைகள் (பரிந்துரைக்கப்பட்ட சட்டதிட்டங்கள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (அ) பந்தியில் கூறவேண்டிய 261 ஆம் அதிகார சபையின் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (அனுமதிக்கப்பட்ட இடையாப்பு) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் கீழ் உள்ளூராட்சி அதிகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி தயாரிக்கப்பட்டதும் 2013.05.17 ஆந் திகதிய 1811 ஆம் இலக்கம் கொண்டதுமான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் படி அறிவிக்கப்பட்டு தென் மாகாண சபையினால் 2014.08.24 ஆந் திகதிய 1878 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின்படி அறிவிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட இடையாப்புகளின் 1 இலிருந்து 29 வரையான பகுதிகளை இந்த முன்மொழிவு அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு மேலே குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தின் (அனுமதிக்கப்பட்ட இடையாப்பு) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் பெந்தோட்டை பிரதேச சபை இத்தால் முன்மொழிகின்றது.

கயான் க்ரிஷாந்த சிரிமான்ன,
சபை முதல்வர்,
பெந்தோட்டை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பெந்தோட்டை,
2014, திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி.

5-255

**மஹரகம நகர சபை**

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து எதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

காந்தி கொடிகார,
தலைவர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2015, ஏப்பிறல் 23.

வீதியின் பெயர் : கொட்டாவ - அத்துருகிரிய வீதி, சாம மாவத்தை முதலாவது கிளை வீதி (127/22, 127/16, 127/14, 127/11, 127/23 ச. அ வரையான பாதை)

| நீளம் : | அகலம் : |
|---|---|
| 57.0 மீற்றர் | 4.5 மீற்றர் |
| 25.0 மீற்றர் | 3.0 மீற்றர் |
| 16.5 மீற்றர் | 3.1 மீற்றர் |

வாகனங்களை திருப்பும் சுற்று 9.0 மீற்றர்

ஆரம்பம் : சாம மாவத்தை - கொட்டாவ

முடிவு : 61/12 ச. அ.

| இடது புறம் குடியிருப்போர் | வலது புறம் குடியிருப்போர் |
|---|---|
| திரு. டீ. டீ. சேனாநாயக்க | திரு. டபிள்யூ. ஆரியரத்ன |
| திரு. டீ. ஜீ. சேனாநாயக்க | திரு. எஸ். ஏ. டீ. சீ. பீ. தீசாநாயக்க |
| திரு. டீ. முத்துபண்டா | திருமதி எஸ். ரத்னவீர |
| திருமதி எச். ஏ. ரீ. எம். பொன்சேகா | |

வீதியின் பெயர் : பொரளை-கொட்டாவ பிரதான வீதிக்கு முன்னால் 174 வீதி, புத்திக்க ஹாட்வெயாரை அண்டிய பாதை.

நீளம் : 250 அடி
அகலம் : 15 அடி
ஆரம்பம் : 138 ச. அ.
முடிவு : 136/3C ச. அ.

| இடது புறம் குடியிருப்போர் | வலது புறம் குடியிருப்போர் |
|---|---|
| திரு. கயாதாச பரணவிதான | திருமதி ரூபிகா வெவகே |
| திரு. எச். எஸ். வீ. விஜயதிலக | திருமதி கே. இந்திராணி பெரேரா |
| திரு. ஜீ. பீ. சுரங்கசுஜித் அபொன்சு | திரு. பி. சிரில் செனவிரத்ன |
| | திரு. சந்திம ஜீவக்க டயஸ் |

*வீதியின் பெயர்* : பன்னிபிட்டிய ருக்மலே ஹொரஹேன வீதி வரிப்பண இலக்கம் 93/9 முதல் 93/11 கொண்ட வீடுகள் அமைந்துள்ள பாதை

நீளம் : 53.5 மீற்றர்
அகலம் : 4.6 மீற்றர்
வாகனம் திருப்பும் சுற்று 9.0 மீற்றர்
ஆரம்பம் : ஹொரஹேன வீதி
முடிவு : 93/7 ச. அ.

| இடது புறம் குடியிருப்போர் | வலது புறம் குடியிருப்போர் |
|---|---|
| திருமதி என். முஹந்திரம் | திரு. எச். சிரிசேன |
| திருமதி பி. சந்திரலதா | திரு. ஈ. ரணசிங்ஹ |
| திருமதி பி. லலிதா | திரு. டபிள்யூ. பிரேமதிலக |
| | திரு. ஆர். எச். எஸ். பிரேமலால் |

5-298

# நானாவித அறிவித்தல்கள்

## ருவன்வெல்ல பிரதேச சபை

எவையேனும் கைத்தொழிலொன்றினை நடாத்துவதுடன் சம்பந்தப்பட்ட துணைச் சட்டத்தின்கீழ் 2015 ஆம் வருடத்திற்காக வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரங்களின் மேல் கட்டணங்களை விதித்தல் - 2015

ருவன்வெல்ல பிரதேச சபையினால் 2015, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி நடாத்தப்பட்ட சபைக் கூட்டத்தில் தீர்மான இலக்கம் இ-19 இன் கீழ் கீழே காட்டப்பட்டுள்ள முன்மொழிதலுக்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

2015 ஆம் வருடத்திற்காக விதிக்கப்பட்ட குறித்த வியாபார வரியினை அந்த வருடத்தில் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமெனவும் மேலும் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

எல். எச். சுதத் மஞ்சுள,
தவிசாளர்,
ருவன்வெல்ல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ருவன்வெல்ல,
2015, பெப்புருவரி மாதம் 19.

### தீர்மானம்

2014.12.19 ஆந் திகதிய 1894 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தில் IV (அ) ஆம் பிரிவில் காணப்படுகின்ற அபாயகரமான வியாபாரங்கள், அபாயகரமான மற்றும் அழகற்ற வியாபார இடாப்பிற்கு மேலதிகமாக, அபாயகரமான மற்றும் அழகற்ற வியாபாரங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் கைத்தொழில்களிற்காக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய குறித்த சட்டத்தின் 147 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கேற்ப, ருவன்வெல்ல பிரதேச சபை அதிகார எல்லையினுள், கீழே அட்டவணையில் I ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் கைத்தொழிலொன்றை 2015 ஆம் வருடத்தில் நடாத்துவதற்காக வழங்கப்படுகின்ற ஏதேனும் அனுமதிப்பத்திரத்தின் மேல் குறித்த கைத்தொழிலை நடாத்துகின்ற வளவின் வருடாந்தப் பெறுமதி II ஆம் நிரலில் வகைப்படுத்தப்பட்டுள்ள எவையேனும் எல்லைகளிற்கு உட்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கு நேரான குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளிற்கேற்பவாரான அனுமதிப்பத்திரக் கட்டணமொன்றை விதித்து அறவிடவேண்டுமென ருவன்வெல்ல பிரதேச சபை முன்மொழிகின்றது.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | I ஆம் நிரல்<br>கைத்தொழிலின் அல்லது வியாபாரத்தின் தன்மை | II ஆம் நிரல் இடத்தின் வருடாந்தப் பெறுமதி<br>ரூபா 750 மிஞ்சாத சந்தர்ப்பத்தில் | <br>ரூபா 750 விட அதிகமாக இருந்தும் ரூபா 1,500 ஐ மிஞ்சாத சந்தர்ப்பத்தில் | <br>ரூபா 1,500 விட அதிகரிக்கின்ற சந்தர்ப்பத்தில் |
|---|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1 | தேனீர் கடை/கோப்பி கடையொன்றை நடாத்துதல் | 350 0 | 500 0 | 750 0 |
| 2 | உணவகமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3 | சிற்றுண்டிச்சாலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 4 | சாப்பாட்டுக்கடையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 5 | வெதுப்பகமொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 6 | விடுதி மற்றும் உணவுச்சாலை ஒன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 7 | மாட்டுப்பண்ணை மற்றும் பால் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8 | மீன் விற்பனை மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 9 | இறைச்சி விற்பனை மற்றும் குளிரூட்டப்பட்ட இறைச்சி | 500 0 | 750 0 | 1,000 0 |
| 10 | கோழி மற்றும் பன்றி பண்ணையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 11 | இனிப்புப் பண்டங்கள் உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | மரக்கறி மற்றும் பழவகைகள் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 13 | குளிர்பான உற்பத்தி மற்றும் விற்பனை | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | சலவைச் சாலையொன்றை நடாத்துதல் | 500 0 | 750 0 | 1,000 0 |

5-257

---

## வெருகல் பிரதேச சபை

குத்தகையும் உரிமக்கட்டணமும் - 2015

**1987 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேசச் சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1695 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் நானாவித அறிவித்தல் பக்கம் 722 தொடக்கம் 727 வரை உப பிரிவு I தொடக்கம் VIII வரை பிரசுரிக்கப்பட்ட கட்டணங்களை 2015, சனவரி 1 ஆந் திகதியில் இருந்து அறவிடுவது எனவும் இதில் 726 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட படகுப் பாதையில் பிரயாணம் செய்யும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கில்களுக்கான கட்டணங்களை இரத்துச்செய்து அவற்றினை இலவசமாக பயணம் செய்ய அனுமதிப்பதெனவும் 2015.04.10 ஆந் திகதி கூட்டத்தின் நான்காம் (04) இலக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதனை அறியத்தருகின்றேன்.

எஸ். விஜயகாந்,
தவிசாளர்,
வெருகல் பிரதேச சபை.

2015, ஏப்பிறல் 15.

5-271